இந்திய அரசு
இந்திய வானிலை ஆய்வு துறை
மண்டல வானிலை ஆய்வு மையம்
6, கல்லூரி சாலை, சென்னை - 600006
தொலைபேசி : 044- 28271951.

GOVERNMENT OF INDIA
INDIA METEOROLOGICAL DEPARTMENT
Regional Meteorological Centre
No. 6, College Road, Chennai–600006
Phone: 044- 28271951.

# தென் மேற்கு பருவ மழை- அறிக்கை

## உலகளாவிய வானிலை அம்சங்கள்:

ஜூன் மாதத்தில் MJO (MADDEN-JULIAN-OSCILLATION)-வின் தாக்கம் அட்லாண்டிக் பெருங்கடல் பகுதிகளில் நிலை கொண்டிருந்ததால் தமிழ் நாட்டில் அதன் தாக்கம் எதுவும் இல்லை.

ஜூலை மாதத்தில் இது அட்லாண்டிக் மற்றும் ஆப்பிரிக்கா பகுதிகளில் இருந்து கிழக்கு நோக்கி இந்திய பெருங்கடல் பகுதிக்கு நகர்ந்தது. இது மேலும் கிழக்கு திசையில் நகர்ந்து செப்டம்பர் மாதத்தில் தென் கிழக்கு ஆசியா பகுதிகளில் நிலைகொண்டிருந்தது.

ஜூன், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் ENSO (EL-NINO-SOUTHERN OSCILLATION) நடு நிலையில் (Neutral phase) இருந்தது.

ஜூன் மாதத்தில் IOD (INDIAN OCEAN DIPOLE) நடு நிலையிலும், ஜூலை மற்றும் ஆகஸ்ட் மாதங்களில் எதிர்மறையாகவும் இருந்தது.

## தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய கடல் பகுதிகளில் நிலவிய வானிலை அம்சங்கள்:

### ஜூன் 2021:

வளிமண்டலத்தில் ஏற்பட்ட காற்றின் திசை வேக மாறுபாடு, வளிமண்டல சுழற்சி, வெப்பச்சலனம் மற்றும் தென்மேற்கு பருவ காற்றின் காரணமாக தமிழகத்தில் பரவலாக மிதமானது முதல் கன மழை பதிவாகியது.

தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான மழை அளவு 62.3 mm, இயல்பான மழை அளவு 51.7 mm இது இயல்பைவிட 21 சதவீதம் அதிகம்.

புதுவையில் பதிவான மழை அளவு 38.5 mm, இயல்பான மழை அளவு 56.0 mm இது இயல்பைவிட 31 சதவீதம் குறைவு.

மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 261.2 மில்லிமீட்டர் மழை நீலகிரி மாவட்டத்தில் பதிவாகியது, குறைந்த பட்ச மழை அளவாக 23.1 மில்லிமீட்டர் மழை செங்கல்பட்டு மாவட்டத்தில் பதிவாகியது

மலைப்பகுதியில் அதிக பட்ச மழை அளவாக மேல் பவானியில் (நீலகிரி) 22 மற்றும் அவலாஞ்சியில் (நீலகிரி) 21 சென்டிமீட்டர் மழை பதிவாகியது.

நிலப்பகுதியில் அதிக பட்ச மழை அளவாக திருமயத்தில் (புதுக்கோட்டை) 19 சென்டிமீட்டர் மழை பதிவாகியது.

## ஜூலை 2021:

வளிமண்டலத்தில் ஏற்பட்ட காற்றின் திசை வேக மாறுபாடு, வளிமண்டல சுழற்சி, வெப்பச்சலனம் மற்றும் தென்மேற்கு பருவ காற்றின் காரணமாக தமிழகத்தில் பரவலாக மிதமானது முதல் கன மழை பதிவாகியது.

தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான மழை அளவு 124.6 மில்லிமீட்டர், இயல்பான மழை அளவு 73.3 மில்லிமீட்டர் இது இயல்பைவிட 70 சதவீதம் அதிகம்.

புதுவையில் பதிவான சராசரி மழை அளவு 103.3 மில்லிமீட்டர், இயல்பான மழை அளவு 75.6 மில்லிமீட்டர் இது இயல்பைவிட 37 சதவீதம் அதிகம்.

மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 449.7 மில்லிமீட்டர் மழை நீலகிரி மாவட்டத்தில் பதிவாகியது, குறைந்த

பட்ச மழை அளவாக 14.8 மில்லிமீட்டர் மழை ராமநாதபுரம் மாவட்டத்தில் பதிவாகியது

மலைப்பகுதியில் (hilly areas) அதிக பட்ச மழை அளவாக வால்பாறை மற்றும் சின்கோனா (கோவை) தலா 17 செண்டிமீட்டர் மழை பதிவாகியது.

நிலப்பகுதியில் (plain land) அதிக பட்ச மழை அளவாக கலயநல்லூர் (கள்ளக்குறிச்சி) 14 செண்டிமீட்டர் மழை பதிவாகியது.

## ஆகஸ்ட் 2021:

வளிமண்டலத்தில் ஏற்பட்ட காற்றின் திசை வேக மாறுபாடு, வளிமண்டல சுழற்சி, வெப்பச்சலனம் மற்றும் தென்மேற்கு பருவ காற்றின் காரணமாக தமிழகத்தில் சில இடங்களில் மிதமானது முதல் கன மழை பதிவாகியது.

தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான மழை அளவு 88.9 மில்லிமீட்டர், இயல்பான மழை அளவு 92.8 மில்லிமீட்டர். இது இயல்பைவிட 4 சதவீதம் குறைவு.

புதுவையில் பதிவான மழை அளவு 137.9 மில்லிமீட்டர், இயல்பான மழை அளவு 123.2 மில்லிமீட்டர். இது இயல்பைவிட 12 சதவீதம் அதிகம்.

மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 449.7 மில்லிமீட்டர் மழை நீலகிரி மாவட்டத்தில் பதிவாகியது, குறைந்த பட்ச மழை அளவாக 18.8 மில்லிமீட்டர் மழை தூத்துக்குடி மாவட்டத்தில் பதிவாகியது.

மலைப்பகுதியில் (hilly areas) அதிக பட்ச மழை அளவாக வால்பாறை (கோவை), அவலாஞ்சி (நீலகிரி ) தலா 9 செண்டிமீட்டர் மழை பதிவாகியது.

நிலப்பகுதியில் (plain land) அதிக பட்ச மழை அளவாக கலசப்பாக்கம் (திருவண்ணாமலை) மற்றும் தஞ்சாவூர் 14 செண்டிமீட்டர் மழை பதிவாகியது.

## செப் டம் பர் 2021:

வளிமண் டலத்தில் ஏற் பட்ட காற்றின் திசை வேக மாறுபாடு,
வளிமண் டல சுழற் சி, வெப்பச்ச லனம் மற் றும் தென் மேற்
கு பருவ
காற் றின் காரணமாக தமிழகத்தில் சில இடங் களில் மிதமானது
முதல் கன மழை பதிவாகியது.

தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான மழை அளவு 117.6 மில் லிமீட்டர ், இயல்பான மழை அளவு 118.3 மில் லிமீட்டர . இது இயல்பைவிட 9 சதவீத ம் குறைவு.

புதுவையில் பதிவான மழை அளவு 124.0 மில் லிமீட்டர ், இயல்பான மழை அளவு 136.6 மில் லிமீட்டர் . இது இயல்பைவிட 9 சதவீத
ம் குறைவு..

மாவட்ட வாரியான அதிகபட்ச சராசரி மழை அளவாக 239.1 மில் லிமீட்டர் மழை திருப்பத்தூர் மாவட்டத்தில் பதிவாகியது,
குறைந்த பட்ச மழை அளவாக 28.0 மில் லிமீட்டர் மழை தூத்துக்குடி
மாவட்டத்தில் பதிவாகியது.

மலைப்பகுதியில் (hilly areas) அதிக பட்ச மழை அளவாக தேவாலா (நீ லகிரி)16 சென்டிமீ ட்டர் மழை பதிவாகியது.

நிலப்பகுதியில் (plain land) அதிக பட்ச மழை அளவாக திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் 18 சென்டிமீ ட்டர்
மழை
பதிவாகியது.

ஜூன் முதல் செப்டம்பர் வரை மொத்தமாக தமிழகம் மற்றும் புதுவையில் பதிவான சராசரி மழை அளவு 433.2 mm, இயல்பான மழை அளவு 376.9 mm. இது இயல்பைவிட 15 சதவீத ம் அதிகம்.

புதுவையில் பதிவான சராசரி மழை அளவு 382.7 mm, இயல்பான மழை அளவு 425.6 mm இது இயல்பைவிட 10 சதவீதம் குறைவு.

| மாவட்டம் | பதிவான மழை (மி.மீ) | இயல்பு மழை (மி.மீ) | வேறுபாடு (%) |
|---|---|---|---|
| அரியலூர் | 433.2 | 376.9 | 15 |
| செங்கல்பட்டு | 387.9 | 457.9 | -15 |
| சென்னை | 500.2 | 459.9 | 9 |
| கோயம்புத்தூர் | 1033.2 | 686.8 | 50 |
| கடலூர் | 438.2 | 356.7 | 23 |
| தர்மபுரி | 369.8 | 392.3 | -6 |
| திண்டுக்கல் | 305.7 | 308.4 | -1 |
| ஈரோடு | 257.8 | 259.9 | -1 |
| கள்ளக்குறிச்சி | 439.8 | 413.2 | 6 |
| காஞ்சிபுரம் | 517.5 | 486.4 | 6 |
| கன்னியாகுமரி | 426.0 | 490.6 | -13 |
| காரைக்கால் | 263.7 | 308.6 | -15 |
| கரூர் | 270.3 | 199.4 | 36 |
| கிருஷ்ணகிரி | 375.2 | 375.2 | 0 |
| மதுரை | 384.1 | 325.2 | 18 |
| மயிலாடுதுறை | 331.8 | 299.3 | 11 |
| நாகப்பட்டினம் | 293.8 | 254.6 | 15 |
| நாமக்கல் | 341.0 | 336.4 | 1 |
| நீலகிரி | 1109.7 | 874.9 | 27 |
| பெரம்பலூர் | 468.7 | 278.7 | 68 |
| புதுச்சேரி | 447.7 | 392.7 | 14 |
| புதுக்கோட்டை | 320.2 | 330.2 | -3 |
| ராமநாதபுரம் | 138.6 | 135.0 | 3 |
| ராணிப்பேட்டை | 623.5 | 457.6 | 36 |
| சேலம் | 503.8 | 421.0 | 20 |
| சிவகங்கை | 322.9 | 301.9 | 7 |
| தஞ்சாவூர் | 156.9 | 177.0 | -11 |
| தேனி | 370.9 | 313.7 | 18 |
| தென்காசி | 327.1 | 215.4 | 52 |
| திருநெல்வேலி | 122.6 | 92.0 | 33 |
| திருப்பத்தூர் | 638.6 | 421.7 | 51 |
| திருப்பூர் | 153.8 | 151.3 | 2 |
| திருவள்ளூர் | 553.2 | 463.4 | 19 |
| திருவண்ணாமலை | 602.8 | 449.4 | 34 |
| திருவாரூர் | 317.8 | 302.3 | 5 |
| தூத்துக்குடி | 90.9 | 64.7 | 41 |
| திருச்சிராப்பள்ளி | 353.1 | 276.8 | 28 |
| வேலூர் | 629.6 | 479.9 | 31 |
| விழுப்புரம் | 517.5 | 395.1 | 31 |
| விருதுநகர் | 172.3 | 189.6 | -9 |

**01.06.2021 TO 30.09.2021**




## தென் மேற்கு பருவமழை காலத்தில் பெய்த அதிக பட்ச மழை அளவு

மலைப்பகுதியில் அதிக பட்ச மழை அளவாக மேல் பவானியில் (நீலகிரி) 22 சென்டிமீட்டர் மழை பதிவாகியது.

நிலப்பகுதியில் அதிக பட்ச மழை அளவாக திருமயத்தில் (புதுக்கோட்டை) 19 சென்டிமீட்டர் மழை பதிவாகியது.

நா. புவியரசன்,
அறிவியலாளர்
வானிலை ஆய்வு மையம்
சென்னை